பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி
சென்னை – 4

23-08-2025 SATURDAY 7.15 PM

## தலைப்புச் செய்திகள்

1. விண்வெளித்துறையில் இந்தியா அடைந்துள்ள வளர்ச்சி, மக்களின் வாழ்க்கையை எளிமைப்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
2. இந்திய – அமெரிக்க வர்த்தகத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை முடிவுக்கு கொண்டுவருவதற்கான பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.
3. பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் தொடர்பாக, இன்று வரை எந்தவொரு அரசியல் கட்சியும் அது குறித்து ஆட்சேபம் தெரிவிக்கவில்லை என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.
4. அமெரிக்காவுக்கு தபால் மூலம் பொருட்கள் அனுப்பப்படுவது தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படுவதாக இந்திய அஞ்சல் துறை அறிவித்துள்ளது.
5. தாய்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டெனிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தார்த் ராவத் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

- இனி விரிவான செய்திகள் –

<<<<<<<<>>>>>>>

விண்வெளித்துறையில் இந்தியா அடைந்துள்ள வளர்ச்சி, மக்களின் வாழ்க்கையை எளிமைப்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தேசிய விண்வெளி தினத்தையொட்டி பிரதமர் இன்று மாலை வெளியிட்டுள்ள காணொலி பதிவில், விண்வெளி தொழில்நுட்பம் அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கான கருவியாக மட்டுமின்றி, மக்களின் வாழ்கைகையையும் இலகுவாக்கி இருப்பதாக கூறியுள்ளார்.

நாட்டின் அரசு நிர்வாக கட்டமைப்பின் ஒருங்கிணைந்த பகுதியாக விண்வெளி தொழில்நுட்பம் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, பயிர் காப்பீட்டுத் திட்டத்திற்கான ஆய்வுப்பணி, மீன் வளம் மற்றும் மீனவர் பாதுகாப்புக்கான தகவல்கள், பேரிடர் மேலாண்மை தகவல்கள் உள்ளிட்ட புவிசார் தகவல்கள் நமக்கு கிடைப்பதாக கூறியுள்ளார்.

தேசிய உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கான தகவல்களும் இதில் கிடைப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

செமி கிரையோஜெனிக் என்ஜின்களை உருவாக்கும் தொழில்நுட்பம் உள்ளிட்டவை பெரிய மாற்றத்தை கொண்டுவரும் என்றும் அவர் கூறினார்.

ககன்யான் திட்டத்தை விரைவில் இந்தியா செயல்படுத்த உள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியா தனக்கான விண்வெளி நிலையத்தை அமைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

தேசிய விண்வெளி தினம் இளைஞர்களுக்கு உற்சாகத்தையும், ஒருவித ஈர்ப்பையும் அளித்துள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

கடந்த 11 ஆண்டுகள் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில், விண்வெளித்துறை பல்வேறு மைல்கற்களை கடந்து சாதனை படைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உற்பத்திக்கான இந்தியா திட்டத்தில் தனியார் நிறுவனம் உருவாக்கிய முதல் பிஎஸ்எல்வி ராக்கெட் விரைவில் விண்ணில் செலுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

நாட்டின் தொலைத்தொடர்பு செயற்கைக்கோள், தனியார் பங்களிப்புடன் உருவாக்கப்பட உள்ளதையும் அவர் குறிப்பிட்டார்.

பொதுத்துறை - தனியார் பங்களிப்புடன் புவி கண்காணிப்பு செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தும் முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

இரண்டு ஆண்டுகளுக்குமுன் நிலவின் தென்துருவத்தை அடைந்த முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்று சரித்திரம் படைத்ததாகவும் அவர் கூறினார்.

சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து திரும்பிய இந்திய வீரர் குரூப் கேப்டன் சுபான்ஷு சுக்லாவை சந்தித்து பேசியதாக கூறிய பிரதமர், சுபான்ஷு சுக்லா நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளார் என்றும் தமது காணொலி பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<<>>>>>>>

இந்திய – அமெரிக்க வர்த்தகத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை முடிவுக்கு கொண்டுவருவதற்கான பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், அமெரிக்காவிற்கு பொருட்களை ஏற்றுமதி செய்யும் சிறிய வர்த்தகர்கள் மற்றும் விவசாயிகள் நலனை காப்பதற்கு அரசு முக்கியத்துவம் அளிக்கும் என்றும் கூறினார்.

நாட்டின் நலன் கருதி, இந்திய – அமெரிக்க வர்த்தகத்தில் சுமூகமான சூழ்நிலையை உருவாக்க அந்நாட்டுடன் பேச்சுக்கள் நடத்தப்படுவதாக அவர் கூறினார்.

கச்சா எண்ணெய் இறக்குமதி மற்றும் அதன் மீதான தடைகள் குறித்து தெரிவித்த திரு ஜெய்சங்கர், அமெரிக்காவின் கட்டுப்பாடுகள் அதிக அளவில் இறக்குமதி செய்யும் சீனாவுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்றும், ஆனால், இந்தியாவுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

உள்நாட்டு உற்பத்தியில் சுயசார்பு நிலையை எட்டுவதற்கு அரசு சிறப்பு முக்கியத்துவம் அளித்து வருவதாக தெரிவித்த அவர், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியை குறைத்து உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதையும், அதற்கான சந்தையை உருவாக்குவதிலும் அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருவதாக தெரிவித்தார்.

இந்தியா – பாகிஸ்தான் உறவுகள் பற்றி குறிப்பிட்ட திரு ஜெய்சங்கர், அந்நாட்டுடனான பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதில் மூன்றாவது நாட்டின் தலையீட்டை இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது என்றும் தெளிவுபடுத்தினார்.

<<<<<<<<>>>>>>>

பீகார் வாக்காளர் பட்டியலில் சிறப்பு திருத்தம் மேற்கொள்ளப்பட்டபின் இன்று வரை எந்தவொரு அரசியல் கட்சியும் அது குறித்து ஆட்சேபம் தெரிவிக்கவில்லை என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, தேர்தல் ஆணையம் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டதாகவும், ஒரு அரசியல் கட்சியிடமிருந்தும் கூட ஆட்சேபமோ அல்லது உரிமைக்கோரலோ பெறப்படவில்லை என்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

தேசிய மற்றும் மாநில கட்சிகளின், முகவர்களிடமிருந்தும் கூட இதுபோன்ற கோரிக்கைகள் பெறப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேரடியாக 99 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உரிமைக்கோரல் மற்றும் ஆட்சேபம் பெறப்பட்டதாகவும் இவற்றில் ஏழு நாட்களுக்குள் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோரிக்கைகளுக்கு பதிலளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த முறை திருத்தத்திற்கு 18 வயது பூர்த்தியடைந்தவர்களிடமிருந்து 2 லட்சத்து 83 ஆயிரத்து 42 படிவங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், விதிமுறைகளின்படி ஏழு நாட்கள் நிறைவடைந்தபின் சம்பந்தப்பட்ட தேர்தல் அலுவலர்கள் அவர்களை பட்டியலில் சேர்ப்பது குறித்து முடிவெடுப்பார்கள் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<<<<<>>>>>>>

அமெரிக்காவுக்கு தபால் மூலம் பொருட்கள் அனுப்பப்படுவது வரும் திங்கட்கிழமை முதல் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படுவதாக இந்திய அஞ்சல் துறை அறிவித்துள்ளது.

அண்மையில் அமெரிக்கா வெளியிட்டுள்ள அறிவிப்பில், வரும் 29-ஆம் தேதிமுதல் 800 டாலர் மதிப்பிலான பொருட்கள் வரை இறக்குமதி செய்வதற்கு அளிக்கப்பட்டிருந்த வரி விலக்கு முற்றிலும் நீக்கப்படுவதாக அறிவித்துள்ளது.

இதனைகருத்தில்கொண்டு, நடைமுறை சிக்கலை தவிர்க்கும் வகையில், இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அஞ்சல் துறை தெரிவித்துள்ளது.

இருப்பினும், 100 டாலருக்கு குறைவாக மதிப்புடைய பரிசுப்பொருட்கள் அனுப்புவதற்கு தடை ஏதும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, அமெரிக்காவுக்கு பொருட்களை அனுப்ப பதிவு செய்துள்ளவர்களுக்கு செலுத்திய கட்டணத்தை திருப்பி அளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அஞ்சல் துறை அமெரிக்காவின் இறக்குமதி வரி தொடர்பான அறிவிப்புகளை தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>>

*இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் அறிவியல் வளர்ச்சி மட்டுமின்றி, நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் மிகுந்த பங்காற்றியுள்ளதாக இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் டாக்டர் த வி வெங்கடேஷ்வரன் தெரிவித்துள்ளார்.*

*(Voice Byte – த வி வெங்கடேஷ்வரன் – 44 Sec.)*

<<<<<<<>>>>>>>

*தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தில் செர்ரி மலர்கள் பூக்கத் துவங்கியுள்ளன.*

*இளஞ்சிவப்பு நிறத்தில் காட்சி அளிக்கும் இந்த மலர்கள் சஹுரா என்று அழைக்கப்படுகிறது.*

*சுற்றுலாப் பயணிகளின் கண்களுக்கு இந்த பூக்கள் விருந்தாக அமைந்துள்ளது என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(Sound Byte – சரவணன் – 38 Sec. )*

<<<<<<<>>>>>>>

*இலங்கையில் அரசு நிதி முறைகேடாக பயன்படுத்தப்பட்டதாக தொடரப்பட்ட வழக்கில், கைது செய்யப்பட்ட அந்நாட்டின் முன்னாள் அதிபர் திரு ரணில் விக்ரமசிங்கே, கொழும்பில் உள்ள தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.*

*நேற்று கைது செய்யப்பட்டவுடன் உடல் நலக்குறைவு ஏற்பட்டதால் சிறைச்சாலையில் உள்ள மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.*

*சிறப்பு மருத்துவ சிகிச்சை அவருக்கு தேவைப்படுவதாக அங்குள்ள மருத்துவ அதிகாரிகள் தெரிவித்ததையடுத்து, கொழும்பில் உள்ள தேசிய மருத்துவமனைக்கு அவர் மாற்றப்பட்டுள்ளார்.*

<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

*தாய்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தார்த் ராவத் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 6-4, 4-6, 6-2 என்ற செட் கணக்கில், நியூசிலாந்தின் Isaac Becroft-ஐ வென்றார்.*

-------

*ஆசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.*

*கஜகஸ்தானின் Shymkent-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவு 10 மீட்டர் ஏர்பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் Elavenil Valarivan – Arjun Babuta இணை தங்கப்பதக்கம் வென்றது.*

*ஜுனியர் கலப்பு இரட்டையர் பிரிவிலும் இந்தியாவின் Shambhavi – Pranav இணை தங்கப்பதக்கம் வென்றது.*

<<<<<<<>>>>>>>